UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இனவரைவியல் நோக்கில் வண்ணார் சமூகம்

**இரா. நந்தினி தேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் இரா. காமராசு**
பேராசிரியர் மற்றும் தலைவர், நாட்டுப்புறவியல் துறை
தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 10

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கை சார் இயங்கியலும் இருப்பியலுமே பண்டைக் காலம் முதல் மானிட வாழ்வில் தரவுகளாகவும் தடையங்களாகவும் விளங்குகின்றன. திணைசார் வாழ்க்கை முறை மாற்றம் கண்ட மக்கள், பல சமூகங்களாக வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு இனக்குழுவிற்கும் மரபுசார் பண்பாடுகள், வரலாறுகள் உள்ளன. நிலவியல் அடிப்படையிலான வாழ்க்கை முறைகள் உள்ளன. அதை போல வண்ணார் இனக்குழு மக்களுக்கும் சமூகத்தில் தனித்த பண்பாடுகள் உள்ளன. சங்க இலக்கியங்களில் சலவைத்தொழில் பற்றிய செய்திகள் பலவும் காணப்படுகின்றன. கல்வெட்டுகளில் வண்ணார் இனக்குழுக்கள் பற்றிய பதிவுகள், வாய்மொழி வழக்காறுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து வண்ணார் இனக்குழுக்களின் தனித்த மரபுசார் பண்பாட்டினை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு நோக்கம்

வண்ணார் இனக்குழு மக்கள் மரபார்ந்த குடித்தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள். இம்மக்களிடம் இன்றளவும் உள்ள வழக்காறுகள், வரலாறுகள் ஆகியவற்றின் கீழ் வண்ணார் இனக்குழுவினரின் பண்பாட்டினை எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

வண்ணார்- வண்ணார் வரலாறு- இலக்கிய தன்வரலாற்று பதிவில் வண்ணார்- தொழில்சார் மரபறிவு- வண்ணார்களின் வழக்காற்றியல் பதிவு

## முன்னுரை

சங்க கால மனிதர்கள் திணைசார் வாழ்வியலை மேற்கொண்டு வந்துள்ளனர். அம்மக்கள் பின்னாளில் சமூகமாக வாழத்தொடங்கி, குடி ஊழிய முறை எனும் வகைமைக்குள் இனக்குழுக்களைக் கொண்டு வந்தனர். குடி ஊழிய முறை தமிழகம் முழுவதும் காணப்பட்டது. குடி ஊழிய முறையின் கீழ் வெட்டிமைத் தொழில்கள், சலவைத் தொழில், மருத்துவம், ஊர்காவல் ஆகிய தொழில்செய்வோர் தனக்குண்டான தொழிலை மற்றவர்க்கு ஊழியமாகச் செய்து கொள்ளும் பரிமாற்றத் தொழில் முறையே குடி ஊழிய முறை (Jaimani system) என பக்தவச்சல பாரதி கூறுகிறார்.

மேல் நிலை மக்கள் தங்களுக்குப் பணிபுரிய நாவிதர், வெட்டியான், சலவைத் தொழிலாளர் போன்றோருக்கு தங்களின் ஊரில் பணியமர் த்தினர். இம்மக்கள் நீண்ட காலமாக ஊழியம் செய்து வந்துள்ளனர். சமூக வளர்ச்சி மற்றும் மாறுதல்களின் விளைவாக இம்முறை தற்போது இல்லை. கிராமபுறங்களில் நடைபெறும் வாழ்வியல் சடங்குகளில் குடித்தொழில்

செய்வோர்களான வண்ணார் இனக்குழுவினர் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தனர்.

## வண்ணார் இலக்கியப் பதிவுகள்

விற்பனைக்கு அனுப்பப்படும் மற்றும் வெளுத்த ஆடைகள், மடிப்புக் கலையாமலும், விரைப்பாகவும் இருக்கப் பசை தோய்த்தல் உதவுகிறது. தற்போது மரவள்ளிக்கிழங்கு மாவிலிருந்து எடுக்கப்படும் ஸ்டார்ச் இதற்குப் பயன்படுகிறது. 'கஞ்சி போடுதல்' என்றும் பசை போடுதலைக் குறிப்பர். இம் முறை தமிழர்களிடம் பாரம்பரியமாக நிலவிய ஒன்று.

**அறனில் புலைத்தி எல்லித் தோய்த்த
புகாப்புகர்
கொண்ட புன்பூங் கலிங்கமொடு'** .........
(நற்றினை 90:3-4)

**நலத்தகைப் புலத்தில் பசை தோய்த்
தெடுத்து** (குறுந் 330:1)

**பசை விரல் புலைத்தி நெடிது பிசைந்
தூட்டிய பூந்துகில்** (அகம் 387:6-7)

**பசை கொல் மெல் விரல் பெருந்தோள்
புலைத்தி** (அகம் 34:11)

எனச் சங்க இலக்கிய சான்றுகள் பலவும் ஆடைக்குப் பசை தோய்த்தனமையைப் பற்றி குறிப்பிடுகிறது.

சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித் தொகையில் **(72:14)** புலத்தி என வண்ணார் தொழில் செய்யும் பெண் குறிப்பிடுவதாக கூறப்படுகிறது. வண்ணார் உவர் மண் சேகரித்தல் போன்ற செய்திகளும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றது.

## வண்ணார்க்கு வழங்கும் வேறுபெயர்கள்

ஏகாலியர், தூசர், ஈரங்கொல்லியார் (ஈரங் கோலியர்), காழியர் என்பன வண்ணாருக்கு வழங்கும் வேறு பெயர்கள் திவாகரம் (நூற்பா 204,206) என குறிப்பிடுகிறது. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டு (849) 'வண்ணார்' என்றும், பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டு (905) 'வண்ணத்தார்' என்றும் வண்ணார்களைக் குறிப்பிடுகிறது.

## வரலாற்று பதிவுகள்

சலவைத்தொழிலாளர்களை வண்ணார் எனப் பொதுவாக அழைக்கின்றனர். இவர்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. 'வண்ணார் குடியிருப்பு' "வண்ணாரச் சேரி" என்று கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டு செய்தி குறிப்பிடுகிறது. வண்ணார்களின் தொழில்முறை மற்றும் வாழ்க்கை குறித்த செய்திகளைக் கூறாவிட்டாலும் வண்ணார்களின் மீது விதிக்கப்பட்ட சில வரிகளைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகிறது. வண்ணார் மீது விதிக்கப்பட்ட வரி வண்ணார் காணம், வண்ணாரப்பாட்டம், வண்ணார் கற்காசு, வண்ணார் வரி, வண்ணார் பாறை, என்ற பெயர்களில் வழங்கி வந்துள்ளது. 'வண்ணாரச் சேரி,' வண்ணாரப் பாறையிடு, வண்ணக்கன், வண்ணான் செய், வண்ணாக் கல் என்ற பெயர்களில் வண்ணாரையும் அவர் தொழிலையும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றது. வண்ணாரின் பணிக்காக மானியமாக வழங்கப்பட்ட நிலம் 'வண்ணார் விருத்தி' என்றழைக்கப்பட்டது.

பல்லவர் காலம் தொடங்கி பிரம்ம எனும் நிலக்கொடைகளைப் பிராமணர்களுக்கு தமிழ் மன்னர்கள் வழங்கி வந்தார்கள் பிரம்மதேயம் என்பது பிராமணர்களுக்கு நிலம் வழங்குவது மட்டுமல்ல. பிராமணர்களுக்குச் சமுதாயத் தொழிலாளர்களாகிய நாவிதர், வண்ணார், கணக்கர், குயவர் இவர்களுக்கும் ஊரில் நிலம் கொடுத்துள்ளனர். ஊதியம் பெற்று வாழ்ந்துள்ளனர். குடி ஊழியர்களாக பின்னரே மாற்றப் பட்டுள்ளனர். வண்ணார்கள் நிலவுடைமையாளர்களாக இருந்துள்ளனர். நிலக்கொடை வழங்கும் உபரி நிலம் உடையவர்களாகவும் விளங்கியுள்ளனர்.

## வண்ணார் இனக்குழுவினர் தன்வரலாற்று பதிவு

"இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடி எனக்கூறுவர்". இலக்கியங்களில் தன்வரலாறுக்கு என தனிச் சிறப்பினைப் பெற்று விளங்குகிறது. சமகால பிரச்சனைகளைக் கூறும் இனக்குழுவரைவியல் சார்ந்த புதினங்கள், கலைகள் சார்ந்த புதினங்கள், மக்கள். தன் வரலாற்றுப் பதிவுகளைக் கூறும் புதினங்கள் வந்த வண்ணம் உள்ளன. தன்னுடைய வாழ்வியல் வரலாற்றையும் தன் சமூகம் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் கூறுவதில் தன்வரலாற்று பதிவுகளுக்குத் தனிச்சிறப்புண்டு. கவிதைகளாகவும் வெளிவந்துள் ளன. உதாரணமாக ஈ.எம்.எஸ்.கலைவாணன் அவர்கள் "ஒரு சவரக்காரனின் கவிதை மயிருகள்" எனும் கவிதை சவரத்தொழிலாளி யின் வாழ்வியலை விவரிக்கிறது. இதே போல ஜூலியஸ் அவர்கள் எழுதிய "ஊருக்கு ஒரு குடி" எனும் தன்வரலாறு 'ஏகாளிகள்' எனப்படும் வண்ணார்கள் குறித்த பதிவாக அமைந்துள்ளது. இரண்டை தீண்டாமைக்கு உள்ளான தன் வாழ்நிலையைச் சுய வெளிப்பாடாக எழுதியுள்ளார். இப்படைப்பில் சாதி ஒழுக்கம், அடிமை நிலை, அடிமைத்

தொழில், தீண்டாமைக் கொடுமை, சாதியும் சமயமும், விடுதலை உணர்ச்சி ஆகிய கூறுகள் அழுத்தம் பெறச் செய்கின்றன.

வண்ணார் இனக்குழுவினர் முந்தைய நாட்களில் ஊர் சோறு எடுத்தல் என்னும் முறை காணப்பட்டது. தான் அனுபவித்த வலிகளைத் தன் வரலாற்றின் வழி கூறுகிறார். வண்ணார்களின் உணவுத்தேவையை இவர்கள் பணி செய்யும் கிராமங்களே நிறைவு செய்தன.

“அம்மா சோறு எடுக்கப் போகும் நானும் கூடப் போவேன். ஒரு பத்து வீடு சோறு எடுத்ததும் அதை என்னிடம் கொடுத்து “நீபோய் இத சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போய்விடுமா” என்று சொல்லி அனுப்பி வைப்பார். ஒவ்வொரு வீட்டிலும் சாப்பாட்டைக் கொண்டு வந்து போடும் இடைவெளி நேரத்தில் எனக்குத் தலைவாரி விடுவார். (ப.21) இது போன்ற எண்ணற்ற பதிவுகள் தன்வரலாற்றுப் பதிவுகளாக ஜூலியஸ் படைத்துள்ளார்.

### வண்ணார் வழக்காறுகள்

தம்தொழிலின் அடிப்படையில் தாம் பணி புரியும் மக்களின் பொருளியல் நிலையை அறிந்துகொள்ளும் வாய்ப்பு வண்ணார்களுக்கு இருந்ததை,

**வீட்டு வளப்பம் மருமகனுக்குத் தெரியும்**
**ஊர்வளப்பம் வண்ணானுக்குத் தெரியும்**

என்ற பழமொழி வீட்டிற்கு வரும் மருமகனுக்கு வழங்கும் உணவானது அவ்வீட்டின் பொருள் வளத்தை வெளிக்காட்டும். ஓர் ஊர் மக்களுடைய பொருள் வளத்தினை அவர் உடுத்தும் அடையும், உண்ணும் உணவும் வெளிப்படுத்தும் தன்மைகளைக் கொண்டவை. இவ்விரண்டும் வண்ணார்கள் செய்கின்றனர். இதனால் வண்ணாருக்கு ஊர் மக்களின் செல்வநிலை அறியும் என்பது பொருளாகும் இன்றைக்கு குடித் தொழில் என்னும் முறைமையில் பணி செய்யும் வண்ணார்கள் மிக்குறைவு.

**படிச்சவனுக்கு மேல் ஏகாலி**
**ஏகாலிக்கு மேல் ஆட்டுக்காரன்**

கல்வியறிவு இல்லாவிட்டாலும், வெளுத்த துணிகளை மாறாமல் உரியவர்களிடம் சேர்ப்பிக்கிறான் ஏகாலி. இதனால் அவன் படித்தவனைவிட மேலானவன். ஒரேவிதமான தோற்றத்தில் இருக்கும் பலரது ஆடுகளையும் மேய்க்கும் ஆட்டுக்காரன், அவற்றை உரியவர்களிடம் மந்தையிலிருந்து பிரித்துத் தந்துவிடுவதால் ஏகாலியை விட அவன் மேலானவன் என்பதே இப்பழமொழியின் பொருள்.

### தோற்றம் குறித்த வாய்மொழிக் கதைகள்

தன் ஆடைகளை வெளுத்துத் தரும்படி ஒரு நாள் சிவபெருமான் வண்ணார் ஒருவரிடம் கொடுத்தார். அவரும் அவற்றை வெளுத்துப் பரிவட்டத்தை, தன் மகனிடமும் ஏனைய ஆடைகளைத் தன் பணியாளனிடமும் கொடுத்து அனுப்பினார்.

வண்ணாரின் மகன் யானை மீதும், பணியாள் குதிரையின் மீதும் கோவிலை நோக்கிப் பயணித்தனர். குதிரையில் சென்ற பணியாள் விரைவாகக் கோவிலுக்குள் சென்றுவிட்டார். யானை ஆடி அசைந்து சென்றதால் வண்ணாரின் மகன் செல்வதற்குள் கோவிலின் கதவு அடைக்கப்பட்டு விட்டது. கோவிலின் புறத்தே நின்ற வண்ணார் புறத்து வண்ணார் என்றழைக்கப் பட்டனர். வெள்ளாவி வைத்தல் பற்றிய வாய்மொழிக்கதை திருவண்ணாமலை பகுதிகளில் உண்டு. சில மூலிகைகளை வெள்ளாவிப் பானையில் இட்டு வைத்தால், துணி நறுமணத்துடன் விளங்குமென்றும், அரச குடும்பத்தின் துணிகளுக்கு இம்முறை பயன் படுத்தப்பட்டது என்று அம்மக்கள் கூறுகின்றனர்.

### வண்ணார்களின் மரபுசார் குறி போடுதல் நுட்பம்

வண்ணார் இனக்குழுவினரின் முக்கியத் தொழில் சலவைச் செய்தல் ஆகும். உலகமயமாதல் காரணமாக அனைத்து தொழில்களும் இயந்திரமயமாகிவிட்டன. இதனால் மரபார்ந்த தொழில்நுட்பங்கள் அழியும் நிலையில் உள்ளன. பண்டைய காலங்களில் வண்ணார்களின் மரபுசார் தொழில்நுட்பம் ஆவணப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஓர் ஊரில் வாழும் பல குடும்பத்தினரின் அழுக்குத் துணிகளை எடுத்து வந்து அவற்றை வெளுத்து அவர்களிடம் திரும்பத் தருவது என்பது சிக்கலான வேலை. துணிகளை மாற்றித் தராமல் உரியவர்களிடம் சரியாகத் தரும் இப்பணியை வியந்து கூறும் தெலுங்குப் பழமொழியொன்று. தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கு பேசும் மக்களிடையே வழங்குகிறது. அதன் தமிழ் வடிவம் பின்வருமாறு,

துணிகளில் குறியிடுவதன் வாயிலாகவே அது யாறுக்குரியது என்பதை வண்ணார்கள் அறிந்துகொள்கிறார்கள். இக்குறிகள் ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்கும். திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்களில் குறியிடும் முறை

***ISSN: 2320-4842 (Print)*** ***ISSN: 3049-2688 (Online)***

பின்வருமாறு அமைந்துள்ளது. தான் பணிபுரியும் குடும்பங்களுக்குரிய குறிகளை:

முதல் வீடு I

இரண்டாவது வீடு III

மூன்றாவது வீடு ●

நான்காவது வீடு ●●●

ஐந்தாவது வீடு X

என இடுவர். ஒரு வீட்டின் ஆண்மக்கள் கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து சென்று தனிக்குடித்தனம் சென்றால் அவர்களுக்குப் புதிய குறியிடுவர். அப்புதிய குறி கூட்டுக் குடும்பத்திலிருந்து குறியை ஒட்டியே அமையும்.

சான்றாக X குறியுடைய கூட்டுக் குடும்பத்தி லிருந்து பிரிந்து தனிக்குடித்தனம் செல்லும் ஆண் மக்களின் வீட்டுத் துணிகளில் பின்வருமாறு குறியிடப்படும்.

தந்தை X

முதல் மகன் ●X ●

இரண்டாவது மகன் X

மூன்றாவது மகன் X ●

நான்காவது மகன் X ●●

திருமணமாகிப் போகும் பெண்களுக்கு அவர்கள் கணவன் வீட்டு ஆடைகளுக்கு இடும் குறிகளையே இடுவார்கள். தந்தை வீட்டுச் சலவைக்குறி இடப்படாது. ஒரு சலவைக்குறியை வைத்து அது எந்த குடும்பத்துக்குரிய துணி என்பதைக் கண்டறி ந்து விடுவர். கொலையுண்டோர் உடலை அடையாளம் காண வண்ணார்களின் துணை யைக் காவல்துறையினர் நாடுவதுண்டு. குற்றம் நடந்த இடத்தில் குற்றச்செயல் செய்தோர் தம் ஆடையை விட்டுச்செல்வதும் உண்டு. இதில் இடப்பட்டுள்ள குறியின் அடிப்படையில் குற்றவாளியைக் கண்டு பிடிக்கவும், வண்ணார் துணையை நாடுவது வழக்கமாக உள்ளது.

கோடுகளை அடையாளக் குறிகளாக இடும் இம்முறை தமிழர்களின் பாரம்பரிய எண்ணல் முறையை அடிப்படையாக் கொண்டு உருவாகியுள்ளது. மனித சமூகமானது தன் வளர்ச்சிப் போக்கில் எண்ணல், முகத்தல், நீட்டல், என மூன்று வகையான அளவை முறைகளையும் காலத்தைக் கணக்கிடும் முறையையும் உருவாக்கி கொண்டது.

## வெள்ளாவி

மரபு சார் தொழிலைப் பின்பற்றுபவர்களுக் கென்று தனித்த மரபறிவு காணப்படுகிறது. மரபுசார் தொழில்நுட்பத்தினை வண்ணார்கள் இனக்குழு மக்களிடம் காணலாம். வெள்ளாவி வைப்பது வட்டாரத்திற்கு வட்டாரம் மாறு படுகிறது. வெள்ளாவிப் பானையின் மீது உவர் முக்கிய துணிகளை அடுக்கி வைப்பதில் நுட்பமுண்டு. மிகுதியான அழுக்க டைந்த துணிகளை முதலில் வைப்பர். இதனால் நீராவி அதிக நேரம் படிந்து அழுக்கு பானையில் விழும். குறைந்த அழுக்குள்ள துணிகளை இரண்டாவதாக வைப்பர். ஏனெனில் அதிக அளவிலான நீராவி தேவைப்படாததுடன், அழுக்கு மிகுந்த துணிகளில் நீராவி படிவதால் ஏற்படும் அழுக்கு கரைசல் இதில் படியாது.

வெள்ளாவி வைத்த நீரை இடுப்பு மற்றும் கால்வலி உள்ளவர்கள் வலியுள்ள இடத்தில் ஊற்றினால் வலி நீங்கிவிடும் என்பதால் பல கிராமங்களில் இருந்து வெள்ளாவி வைத்த நீரினைப் பெற்றுச் செல்கின்றனர். மூங்கில் பிரம்பினால் ஆன கூடைகளை வெள்ளாவி யில் இருந்து வெளியேறும் ஆவியில் காட்டினால் கூடை கெட்டுப் போகாமல் நீண்ட நேரம் உழைக்கும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

## நிறைவுரை

உலக மயமாதல் தன்மைகளுக்கு எற்ப மரபுசார் தொழில்கள் இயந்திரமயமாக்க பட்டுள்ளன. குடி ஊழிய முறையில் சலவைத் தொழில் செய்த தொழில்கள் தானியங்கி இயந்திரங்களை கொண்டு அவரவர் வீடுகளில் மக்கள் சலவை செய்கின்றனர். இதனால் சலவை தொழிலில் மரபார்ந்த தொழில் நுணுக்கங்கள் இல்லாமல் போனது. கால ஓட்டங்களுக்கு கல்வி ஆய்தமாகக் கொண்டு குடி ஊழிய முறை மாற்றப்பட்டது. இந்நிலையில் சலவைத் தொழிலாளர்களான வண்ணார் இனக்குழு மக்களின் பண்பாடுகளை ஆவணப்படுத்தியுள்ளது.

## துணைநூற்பட்டியல்


1. சிவசுப்பிரமணியன். ஆ., வண்ணார் வரலாறும் வழக்காறுகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2019
2. ஜூலியஸ் ஊருக்கு ஒரு குடி, பூபாளம் பதிப்பகம், முத்து வீரக்காண்யன்பட்டி, தஞ்சாவூர், 2023
3. தனஞ்செயன். த தமிழகத்தில் புரதவண்ணார்கள், அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2022